# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,516 — 1958 සැප්තැම්බර් 5 වැනි සිකුරාද — 5.9.1958**

11,516 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5 திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## உபவிதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

*கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளை தெற்குக் கிராமப்பகுதியின் கிராமச் சங்கம் உண்டாக்கியதும் 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்" றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான உபவிதிகள்.*

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1958 ம் ஆடு ஒகஸ்ட் மீ 19 ந் உ.

#### உபவிதிகள்

#### வாகன, மிருக வரி

1. (1) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி இறட்டும் வாகன, மிருக வரியின்பொருட்டு, அந்த வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் " அ " அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதும் சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளக் கூடியதுமான பத்திரத்தின் மாதிரியில் ஒரு விவர அட்டவணையை தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

(2) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி வரி செலுத்தப் பாத்திரப்பட்டவர் 1959 ம் ஆண்டுக்கான அட்டவணையை எழுதி நிரப்பி 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ந் திகதி அல்லது அதற்கு முன்னர் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அவர் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் இனிவரும் எந்த வருடத்துக்கும் அத்தகைய அட்டவணை தரும்படி கேட்கப்படமாட்டார்.

2. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த ஒவ்வொருவரும் வேறு அறிவித்தலின்றி—

(அ) 1959 ம் வருடத்துக்கு அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும், அவ்வருடத்து மார்ச் மாதம் 31 ந் திகதிக்கு முன்னர் வரி கொடுக்கவும் ;

(ஆ) இனிவரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்கள், மிருகங்களில் இனிவரும் அந்த வருடத்தில் முப்பது நாட்களுக்குமேல் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருப்பனவற்றுக்கு அவ்வருடம் மார்ச் மாதம் 31 ந் திகதிக்கு முன்னர் வரி கொடுக்கவும் பாத்திரராவார்.

3. எவரேனும் 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த பின்னர், அந்த அட்டவணையில் சொல்லப்படாததும் சட்டப்படி வரிக்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அல்லது 1 ம் உபவிதியின்படி அட்டவணை எதுவும் கொடுக்காது எவரும் முதல் முறையாக அவ்வரிக்குப்பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை அவர் வாங்கிய அல்லது வைத்திருக்கவேனும் உபயோகிக்கவேனும் தொடங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அவ்விதம் வாங்கியதை, வைத்திருப்பதை அல்லது உபயோகிப்பதைக் குறித்து தலைவருக்கு எழுத்துமூலமான ஒரு அறிவித்தல் அனுப்பி இதன் " அ " அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பத்திரத்தின் மாதிரியில் எழுத்துமூலமான விவர அறிக்கை ஒன்றையும் கொடுக்க வேண்டும்.

4. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கை கொடுக்கும் ஒவ்வொருவரும் அந்த அறிக்கை எந்த வருடத்தில் கொடுக்கப்படுகின்றதோ அந்த வருடத்துக்கும் அதற்குப் பின்வரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள, அவருடைய சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்திலிருக்கும், வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அவருக்கு அதன் பொருட்டு அறிவிக்கப்படும் காலத்துக்குள் வரி கொடுக்கப் பாத்திரராவார்.

5. (1) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர், அந்த அறிக்கையில் அல்லது அட்டவணையில் பதிந்துள்ள அல்லது சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதற்கும் வரி கொடுக்கும் பாத்தியதையிலிருந்து தவிர்த்துவிடும்படி சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி கோரும் ஒவ்வொருவரும் அவ்விதம் கோருதற்கான காரணங்களைக்காட்டி தவிர்த்துவிடுதற்கான தமது கோரிக்கைபற்றி தலைவருக்கு உடனே எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(2) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர் எந்த வாகனத்தையேனும் அல்லது மிருகத்தையேனும் ஆட்சிபண்ணமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விடும் ஒவ்வொருவரும், அந்த வாகனத்தை அல்லது மிருகத்தைத் தாம் ஆட்சிபண்ணமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விட்டுவிட்டதாக உடனே தலைவருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்து, அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை அவர் விற்றுவிட்டால் அதனை வாங்கியவரின் பெயரையும் விலாசத்தையும் தலைவருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

6. எவரேனும் வரி கொடுத்ததும், வரி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வாகனத்துக்கும் இதன் "ஆ" அட்டவணையில் காட்டியுள்ள வாகனங்களைப் பேதப்படுத்திக் காட்டும் எழுத்துக்களில். அந்த வாகனத்துக்கேற்ற எழுத்துக்களையும் அது எந்த வருடத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதிவு இடாப்பிலுள்ள அந்த வாகனத்தின் இலக்கத்தையும் கொண்ட உலோகத்தகடு ஒன்றை தலைவர் கொடுக்க வேண்டும். தகடு எதுவும் பாவிப்பினால் அல்லது வேறுவகையில் தெளிவாகத் தெரியாதுபோனால் அல்லது உருவழிந்து போனால் அதன் சொந்தக்காரர் தலைவரிடம் அதைத் திருப்பிக்கொடுத்து ஐம்பது சதமும் செலுத்தினால் புதிதாக ஒன்றைப் பெறும் உரித்துள்ளவராவார். வழங்கப்பட்ட தகடு, எதுவும் காணமல் போய்விட்டது அல்லது களவு போய்விட்டது என்று சத்தியக்கடுதாசி மூலமாகவேனும் அல்லது வேறு விதத்திலேனும் தலைவர் நம்பு வாராயின், அவர் அதன் சொந்தக்காரர் அறுபது சதம் செலுத்தி விண்ணப்பிக்குங்கால் அவருக்கு ஒரு புதிய தகட்டைக் கொடுக்கலாம்.

7. ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தக்காரர் அல்லது பொறுப்பாளியாயிருப்பவர் அந்த வாகனத்துக்குக் கொடுக்கப்பட்ட தகட்டை அந்த வாகனத்தின் துலக்கமான ஒரு பாகத்தில் மாட்டிவைக்க வேண்டும்.

8. ஏதேனுமொரு தெரு அல்லது பாதை வழியாகச் சென்று கொண்டிருக்கும் எந்த வாகனத்தையும், அந்த வாகனத்தில் மாட்டி வைக்க வேண்டுமென்று 7 ம் உபவிதியால் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பார்வையிடுதற்பொருட்டு அக்கிராசனரேனும் அல்லது அக்கிராசனரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரேனும் நிறுத்துவதும் தடுத்து வைப்பதும் சட்டபூர்வமானதாகும். அந்த வாகனத்தின் சாரதி அல்லது பொறுப்பாளி அக்கிராசனராவது அல்லது வேறு அப்படிப்பட்ட உத்தியோகத்தர் எவராவதுமாவது கேட்கப்பட்டால் அந்த வாகனத்தை நிறுத்தி அவரை அத்தகட்டை பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

9. இந்த உபவிதிகளில் :—

" அக்கிராசனர் " என்பது கிராமச்சங்க அக்கிராசனர் எனப் பொருள்படும்.

" சங்கம் " என்பது மட்டக்களப்பு மாவட்டத்து கோறளை தெற்கு கிராமப்பகுதியின் கிராமச்சங்கம் எனப் பொருள்படும்.

" சட்டம் " என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனப்பொருள்படும்.

## "அ" அட்டவணை

### பத்திரம்

### கோறளை தெற்குக் கிராமச்சங்கம்

வாகன, மிருக வரி பற்றிய உபவிதிகளின் தாற்பரியப்படி கொடுக்க வேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விவர அறிக்கை.

இல. : ————

சொந்தக்காரரின் பெயர் : ————.

வட்டாரம் : ————.

கிராமம் : ————.

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விவரங்கள் | எண்ணிக்கை (சொல்லில்) | குறிப்புகள் (துவிச்சக்கர வண்டிகளாயின் உற்பத்தியாளரின் இலக்கம் தருக) |
|---|---|---|
| பாரவண்டிகள், பிரயாண வண்டிகள் அல்லது றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இன வண்டிகளும் .. | | |
| இரட்டைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. | | |
| ஒற்றைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. | | |
| றிக்ஷோக்கள் .. .. | | |
| கைவண்டிகள் .. .. | | |
| துவிச்சக்கர வண்டிகள் .. | | |
| யானைகள் .. .. | | |
| குதிரைகள் .. .. | | |
| கோவேறு கழுதைகள் .. | | |
| கழுதைகள் .. .. | | |

நானறிந்த அளவில் மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவை என்று உறுதிப்படுத்துகிறேன்.

........................
சொந்தக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

## "ஆ" அட்டவணை

| | |
|---|---|
| பாரவண்டி, பிரயாண வண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | கோ. தெ. வ. |
| இரட்டை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | கோ. தெ. இ. |
| ஒற்றை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | கோ. தெ. ஒ. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. .. | கோ. தெ. றி. |
| கைவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | கோ. தெ. கை. |
| துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றுகும் .. | கோ. தெ. து. |

---

## கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளை தெற்குக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் உண்டாக்கியதும் 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்"றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான உபவிதிகள்.

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
ஓகஸ்ட் 19, 1958.

## உபவிதிகள்

### தீங்கான, அபாயமான வியாபாரங்கள்

1. (1) கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) வைக்கோல் சேகரித்துவைத்தல் ;

(ஆ) வெட்டுமரக்கடை அல்லது விறகுக்கடை வைத்தல் ;

(இ) மண்ணெண்ணெய்க்கடை வைத்தல் ;

(ஈ) ஆப்ரணங்கள் செய்தல் ;

(உ) கொல்லுலை வைத்தல் ;

(ஊ) அச்சகம் வைத்தல் ;

(எ) காற்றடைத்த பானங்கள் செய்தல் ;

(ஏ) "கபூக்கல்", பொடிக்கல் அல்லது கருங்கல் தோண்டுதல் ;

(ஐ) குழிவெட்டி முதிரைக்கல் தோண்டுதல் ;

(ஒ) நெற்குத்தும் ஆலை அல்லது அரைக்கும் ஆலை வைத்தல் ;

(ஓ) இயந்திரத்தால் மிளகாய் அல்லது கறிச்சரக்கு அரைத்தல் ;

(ஔ) இய்ந்திரத்தால் அல்லது செக்கால் தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் வடித்தல் ;

(க) எண்ணெய் அல்லது வேறு எரிபொருள் அல்லது நீராவி அல்லது மின்சக்தி கொண்டு இயங்கும் இயந்திரம் பாவிக்கப்படும் வியாபாரம் எதுவும் ;

(கா) மரம் அரிகுழி வைத்தல் ;

(கி) தச்சுத்தொழிற் களரி வைத்தல் ;

(கீ) மோட்டார் வாகனங்கள் அல்லது துவிச்சக்கர வண்டிகள் செப்பனிடும் தொழிற் களரி வைத்தல் ;

(கு) தேங்காய்த் துருவல் செய்தல் ;

(கூ) கரி சேகரித்துவைத்தல் ;

(கெ) பருத்திப் பஞ்சு சேகரித்து வைத்தல் ;

(கே) தும்பு செய்தல் அல்லது சேகரித்துவைத்தல் ;

(கை) மின்னரம் பாடம்பண்ணல் அல்லது சேகரித்துவைத்தல் ;

(கொ) தேயிலை அல்லது ரப்பர் உற்பத்திச்சாலை வைத்தல்.

(2) கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) பாடம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்துவைத்தல் ;

(ஆ) மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தின்பொருட்டு அழுகிக் கெடும் உணவுப் பொருட்களு அல்லது பதார்த்தங்கள் சேகரித்து வைத்தல் ;

(இ) பசளை அல்லது செயற்கை உரம் செய்தல் ;

(ஈ) விளுக்கிரி (காடி) செய்தல் ;

(உ) சவர்க்காரம் செய்தல் ;

(ஊ) தோல் பதனிடுஞ்சாலை வைத்தல் ;

(எ) பாக்குப் பாடம்பண்ணல் ;

(ஏ) இரத்தம் அல்லது கழிவு இறைச்சி அவித்தல் ;

(ஐ) பாணி காய்ச்சுதல் ;

(ஒ) கள் சேர்க்கும் நிலையம் வைத்தல் ;

(ஓ) சுருட்டு அல்லது பீடி அல்லது "சிகரெட்" சுற்றுதல் ;

(ஔ) பலகை பாடம்பண்ணல் அல்லது வெட்டுமரம் பக்குவஞ்செய்தல் ;

(க) மூன்று மூடைகளுக்கு அதிகமாக தோல், எலும்புகள், சுண்ணாம்பு, செயற்கை உரம் அல்லது செயற்கை உரம் செய்வதற்குப் பாவிக்கும் பொருட்கள் சேகரித்து வைத்தல் ;

(கா) புகையிலை பாடம்பண்ணல், உலர்த்தல் அல்லது சேகரித்து வைத்தல் ;

(கி) கோடா காய்ச்சுதல் ;

(கீ) கொப்பரா செய்தல் அல்லது சேகரித்துவைத்தல் ;

(கு) தேங்காய் மட்டைகளை ஊறப்போடுதற்கு அடைப்பு வைத்தல் ;

(கூ) ரப்பர் சேகரித்துவைத்தல், பாடம் பண்ணல் அல்லது செய்தல் ;

(கெ) "ஷீட்" அல்லது கிரேப் ரப்பர் செய்தல் அல்லது புகைபோடுதல் ;

(3) கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயமான, தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) செங்கற்கள் அல்லது ஓடுகள் சுடுதல் ;

(ஆ) சுண்ணும்பு சுடுதல், சேகரித்துவைத்தல், பாடம்பண்ணல் அல்லது தகர்த்தல் ;

(இ) மின் குளங்களில் மின்சக்தி நிரப்புதல் ;

(ஈ) தும்புக்கு சாயமேற்றுதல் ;

(உ) சிரட்டைக்கரி சுடுதல்.

### கட்டிடங்கள் அமைத்தல்

2. (1) எவரேனும் கிராமப் பகுதிக்குள் புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும்—

(அ) கிராம வண்டித்தெரு எதனதும் மத்தியிலிருந்து பதினைந்து அடி தூரத்துக்குள்ளேனும் ; அல்லது

(ஆ) காலக்கிரமத்தில் ஒரு கிராம வண்டித் தெருவாக மாற்றப்படவிருக்கும் பாதையென்று சங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கும் கிராமப் பாதை எதனதும் மத்தியிலிருந்து பதினைந்து அடி தூரத்துக்குள்ளேனும் ;

நிர்மாணிக்கலாகாது.

(2) தலைவருக்கு எழுத்தில் முப்பது நாள் அறிவித்தல் கொடுக்காமல் எவரேனும் (1) ம் பந்தியில் சொல்லப்படும் வண்டித்தெரு அல்லது பாதை எதனதும் ஓரமாக கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும் நிர்மாணிக்கலாகாது.

### உத்தியோகத்தர்களும் வேலையாட்களும்

3. சங்கத்துக்கு வருமதியாகும் எல்லா வரிகளையும் கட்டணங்களையும் திரட்டுவதற்கும், தலைவரின் கையொப்பத்தின் பிரதி லிபியையும் சங்க முத்திரையையும் கொண்ட பற்றுச்சீட்டுகளை வழங்குவதற்கும் உத்தியோகத்தர் அல்லது பிறர் எவருக்கும் தலைவர் எழுத்தில் அதிகாரம் அளிக்கலாம்.

4. எவரேனும் வேண்டுமென்று—

(அ) தலைவரையாவது அல்லது சங்கத்தின் வேறு உத்தியோகத்தர் எவரையுமாவது சட்டத்தின் ஏற்பாடுகள். அல்லது அதன்கீழ் உண்டாக்கப்பட்ட உபவிதிகள் எதனுலும் அல்லது எதன் கீழும் அந்த தலைவருக்கு அல்லது உத்தியோகத்தருக்கு கொடுக்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட தத்துவம், கடமை அல்லது அலுவல் எதையும் பிரயோகிக்க, நிறைவேற்ற அல்லது செய்யவிடாது தடுக்கலாகாது ; அல்லது

(ஆ) சங்கத்தால் அல்லது சங்கத்துக்காக வேலைக்கு அமர்த்தப்பட்ட வேலையாள் அல்லது தொழிலாளி எவரையும் தலைவர் அல்லது சங்கத்தின் வேறு உத்தியோகத்தர் எவரும் அவருக்கு இட்ட சட்டமுறையான கடமை எதையும் செய்யவிடாது தடுக்கலாகாது.

### மலமகற்றலும் குப்பை கூட்டலும்

5. வறுமைகாரணமாகச் சங்கத்தால் தவிர்த்துவிடப்பட்ட ஒரு குடியிருப்பாளர் தவிர்ந்த, மலமகற்றும் சேவையால் சேவிக்கப்படும் எந்த வளவினதும் குடியிருப்பாளர் வாளி ஒன்றுக்கு ரூபா 1.00 விகிதமான மலமகற்றற் கட்டணம் ஒன்றை மாதந்தோறும் சங்கத்துக்கு கொடுக்க வேண்டும்.

6. வறுமைகாரணமாக சங்கத்தால் தவிர்த்துவிடப்பட்ட ஒரு குடியிருப்பாளர் தவிர்ந்த, குப்பை கூட்டும் சேவையால் சேவிக்கப்படும் எந்த வளவினதும் குடியிருப்பாளர், வாளி ஒன்றுக்கு 20 சதப் விகிதமான குப்பை கூட்டற் கட்டணம் ஒன்றை மாதந்தோறும் சங்கத்துக்கு கொடுக்கவேண்டும்.

7. இந்த உபவிதிகளில்—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனப்பொருள்படும் ;

" சங்கம் " என்பது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளை தெற்கு கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப்பொருள்படும் ;

" சட்டம் " என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனப் பொருள்படும்.

## விளம்பரம்

**1958 ம் ஆண்டு புரட்டாதி (செப்ரெம்பர்) மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாதலால், 1958 ம் ஆண்டு புரட்டாதி (செப்ரெம்பர்) மாதத்தின் நான்காம் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1958 ம் ஆண்டு புரட்டாதி செப்ரெம்பர் மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படும். அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு புரட்டாதி (செப்ரெம்பர்) மாதம் 22 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.**

பேர்னர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ஆண்டு புரட்டாதி (செப்ரெம்பர்) மாதம் 2 ந் திகதி.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **" நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன் பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | | ரூ. ச. | | |
|---|---|---|---|---|
| ஒரு வருட சாந்தா | .. | 15 0 | .. | ஒவ்வொரு பகுதிக்கும் |
| | | 7 0 | .. | ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி | .. | 0 25 | | |
| | | 0 31 | .. | தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 10 | | |
| | | 0 14 | .. | தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்க பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.